# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## # மறக்கப்படாத செயற்பாடு என்றால் என்ன?

# மறக்கப்படாத செயற்பாடு என்பது 2013 முதல் பப்புவா நியூ கினி மற்றும் நவூறு தீவில் காவலில் வைக்கப்பட்ட தகுதி உள்ள அகதிகளுக்கு பாதுகாப்பான மறுகுடியேற்றம் அளிப்பதற்கான ஒரு பிரத்தியேக இயக்கம் ஆகும்.

## # மறக்கப்படாத செயற்பாட்டின் அங்கமாக உள்ள நிறுவனங்கள் யாவை?

கனடா கேரிங் சொசைட்டி ஆப் விஸ்லர், பி.சி. மற்றும் மொசைக் ஆப் வான்கூவர், பி.சி. ஆகிய நிறுவனங்கள் இந்த திட்டத்தை கனடாவில் ஆரம்பித்தன. கனடாவில் அகதிகளை மறுகுடியேற்றம் செய்து ஆதரவு அளிக்க மொசைக் நிறுவனம் கனடிய அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஆஸ்திரேலியத் தொண்டர்கள் விசால மனதுடன் ஆதரவளித்து விண்ணப்ப படிவங்களைப் பூர்த்தி செய்வது மற்றும் ஆஸ்திரேலிய அகதி மன்றத்தின் நன்கொடைகள் இவற்றின் மூலம் இந்தத் திட்டம் பயனடைந்துள்ளது. இத்திட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் அகதி நிறுவனம் மற்றும் சமுதாயத் துணைவர் நிறுவனங்களான ஆஸ்திரேலிய புலம் பெயர்ந்தோர் உயர்வு நிறுவனம் ஆகியவற்றுடன் நெருக்கமான ஒத்துழைப்பு கொண்டுள்ளது.

# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## இத்திட்டத்தில் நான் எப்படிப் பதிவு செய்வது?

இங்கே கணினி மூலம் இணையத்தின் வழியே பதிவு செய்வதற்கான இணைப்பை அளித்துள்ளோம் (நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருந்தால் மறுபடியும் பதிவு செய்யாதீர்கள்)
https://www.mosaicbc.org/services/settlement/refugees/onf/

## இத்திட்டத்தில் நான் பதிவு செய்து விட்டால், எனது விண்ணப்பம் கனடா அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அர்த்தமா?

***இல்லை. அவ்வாறு அல்ல.***

இத்திட்டத்தில் பதிவு செய்வதற்கு அர்த்தம், #மறக்கப்படாத செயற்பாடு திட்டத்தின் கீழ் பிரத்தியேக அகதி ஆதரவு அளிக்கும்பொருட்டு கருதப்பட ஒரு தகவல் தளத்தில் உங்கள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்பதே ஆகும்.

நீங்கள் கனடா வருவதற்கான விண்ணப்பம் கனடா அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அதற்கு அர்த்தமல்ல.

# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

MOSAIC

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## நான் இந்தத் திட்டத்தில் பதிவு செய்தால், நான் பிரத்தியேகமாக கனடா வருவதற்கு ஆதரவு அளிக்கப்படுவேன் என்ற உத்தரவாதம் அளிக்கப்படுகிறதா?

***இல்லை. உங்களுக்கு அந்த உத்தரவாதம் இல்லை.***

மொசைக் நிறுவனம் ஆதரவு பெறுவதற்கான உங்கள் விண்ணப்பத்தை கனடா அரசாங்கத்திற்கு அளிக்கும் என்ற உத்தரவாதத்தை அளிக்கவில்லை. கனடா வருவதற்கான பிரத்தியேக ஆதரவிற்கு உள்ள தகுதி அளிக்கும் காரணிகளை மேலும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். இத்திட்டம் நன்கொடைகள் மற்றும் கனடா அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் ஒதுக்கும் ஆதரவு இடங்கள் கிடைக்கும் வாய்ப்பு இவற்றைப் பொறுத்தது.

## கனடாவிற்குப் பிரத்தியேக ஆதரவு பெற்று வருவதற்கு யார் தகுதி உள்ளவர்கள்?

கனடாவிற்குப் பிரத்தியேக ஆதரவு பெற்று வருவதற்கு, நீங்கள் மாநாடு வெளிநாட்டு அகதி வகுப்பு அல்லது புகலிட நாட்டு வகுப்பு (மனிதாபிமான அடிப்படையில் காக்கப்பட்ட வெளிநாட்டு மக்கள்) என்ற ஒன்றிற்குள் வர வேண்டும். வேறு நிலையான தீர்வு எதுவும் உங்களுக்கு இருக்கக் கூடாது. நீங்கள் மருத்துவ, பாதுகாப்பு மற்றும் குற்றப்பழி சோதனைகளில் தேர்ச்சி பெறவும் வேண்டும்.

# மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

MOSAIC

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

<u>மாநாடு வெளிநாட்டு அகதி வகுப்பு</u>

"மாநாடு" என்ற சொல் ஐக்கிய நாடுகள் சபையின் அகதி நிலை குறித்த மாநாட்டைக் குறிக்கும்.

- கீழ்க்கண்டவற்றில் ஒன்றாக இருந்தால் நீங்கள் ஒரு மாநாடு வெளிநாட்டு அகதி
    - உங்கள் இனம், மதம், தேசியம், ஒரு குறிப்பிட்ட சமுதாயக் குழு அங்கம் அல்லது அரசியல் அபிப்பிராயம் இவற்றால் கொடுமைக்கு ஆளாவீர்கள் என்ற பயம் கொண்டிருத்தல்; மேலும்,
        - கனடாவிற்கு வெளியில் இருத்தல்;
        - உங்கள் குடியுரிமை பெற்ற நாட்டிற்கு வெளியில் இருக்கிறீர்கள் மற்றும் உங்கள் பயத்தால் அல்லது உங்கள் நாட்டின் பாதுகாப்பைப் பெற விரும்பவில்லை அல்லது முடியவில்லை; அல்லது;
        - உங்களுக்குக் குடியுரிமை நாடு எதுவுமில்லை, வழக்கமாக நீங்கள் குடியிருக்கும் நாட்டை விட்டு வெளியில் இருக்கிறீர்கள் மற்றும் உங்கள் பயத்தால் அந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை அல்லது முடியவில்லை

<u>புகலிட நாட்டு வகுப்பு (மனிதாபிமான அடிப்படையில் காக்கப்பட்ட வெளிநாட்டு மக்கள்)</u>

புகலிட நாட்டு வகுப்பு என்பது மாநாடு வெளிநாட்டு அகதி வகுப்பு என்ற பிரிவிற்கு தகுதி பெறாத அகதி நிலையில் உள்ளவர்களுக்கு மறு குடியேற்றம் அளிக்க கனடாவின் எதிர் செயல்பாடு ஆகும்.

# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

- புகலிட நாட்டு வகுப்பு பிரிவில் நீங்கள் உறுப்பினராக கீழ்க்கண்டவற்றில் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
    - நீங்கள் குடியுரிமை பெற்ற நாட்டில் அல்லது வழக்கமாக வசிக்கும் நாட்டில் பெருமளவில் மனித உரிமைகள் மீறப்படுதல் அல்லது குடிமுறை அல்லது ஆயுதம் கொண்ட மோதல்கள் நிகழ்தல் மற்றும்
        - கனடாவிற்கு வெளியில் இருத்தல்;
        - நீங்கள் குடியுரிமை பெற்ற நாட்டிற்கு வெளியில் இருக்கிறீர்கள் மற்றும் உங்கள் பயத்தால் உங்கள் நாட்டின் பாதுகாப்பைப் பெற இயலவில்லை அல்லது விரும்பவில்லை; அல்லது;
        - உங்களுக்கென்று குடியுரிமை உள்ள நாடு இல்லை; முன்பு குடியிருந்த உங்கள் நாட்டைவிட்டு வெளியில் இருக்கிறீர்கள்; உங்கள் பயத்தால் அந்த நாட்டிற்குத் திரும்பச் செல்ல இயலவில்லை அல்லது விரும்பவில்லை

<u>நிலைத்திருக்கக்கூடிய தீர்வுகள்</u>

கனடாவில் மறுகுடியேற்றத்திற்கான விண்ணப்பத்தை ஒரு புலம் பெயர்வு அலுவலர் அகதி விண்ணப்பதாரருக்கு ஒப்புக்கொள்ளக்கூடிய கால வரம்பில், வேறு வாய்ப்பு எதுவுமில்லை, வேறொரு நிலையான தீர்வு எதுவுமில்லை என்று திருப்தி அடைய வேண்டும்.

மூன்று வகை நிலைத்திருக்கக்கூடிய தீர்வுகள் உள்ளன.

# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

1. தன்னிச்சையாக தாயகம் திரும்புதல்
   அகதிகள் தாங்களாகவே தாங்கள் குடியுரிமை பெற்ற அல்லது வழக்கமாக வாழ்ந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்லுதல், தன்னிச்சையாக தாயகம் திரும்புதல் ஆகும். தன்னிச்சையாக தாயகம் திரும்புதல் நிகழ தாம் தோன்றிய நாட்டில் சூழ்நிலை நிலைத்த மற்றும் அர்த்தமுள்ள வழியில் பாதுகாப்பாகத் திரும்பும்படி மாற்றமடைந்திருக்க வேண்டும்.

2. உள்ளார்ந்த ஒன்றிணைதல்
   உள்ளார்ந்த ஒன்றிணைதல் என்பது ஒரு அகதிக்குக் கிட்டும் நீண்ட காலத் தீர்வு ஆகும். அது பாதுகாப்பான நிலைகள் கொண்ட புகலிடம் அளிப்பதை விட மேலானது. உள்ளார்ந்த ஒன்றிணைதல் புகல் தரும் சமுதாயத்துடன் அகதிகள் பெருமளவில் பங்கு கொள்ள அனுமதிக்கிறது.
3. கனடாவைத் தவிர வேறொரு நாட்டில் மறுகுடியேற்றம்
   கனடாவைத் தவிர வேறொரு நாட்டில் மறுகுடியேற்றம் பெற வாய்ப்பளித்தல், உதாரணங்கள்: யூ.எஸ்.ஏ., பிரான்சு, ஃபின்லாந்து முதலியன

<u>அனுமதிப்பு மதிப்பீடு</u>

**மருத்துவ, பாதுகாப்பு மற்றும் குற்றப்பழி சோதனைகள்**

நீங்கள் கனடாவுக்கு வெளியில் உள்ள குடிநுழைவு, அகதிகள் மற்றும் குடிமை உரிமை அலுவலகம் தேர்ந்தெடுக்கும் மருத்துவர் ஒருவரிடம் மருத்துவப்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நீங்கள் கனடா குடிநுழைவு, அகதிகள் மற்றும் குடிமை உரிமை அலுவலகம் கனடாவிற்குக் குடியேற விரும்பும் விண்ணப்பதாரர்கள் யாவரையும் முன் வரலாறு

MOSAIC

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

மற்றும் பாதுகாப்புச் சோதனைகள் செய்யும். அவற்றில் கடந்த கால குற்ற நடத்தைகள், அத்து மீறல்கள், சட்ட மீறல்கள் முதலியன அடங்கும். சோதனைகள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆபத்துக்கு ஆளாக்கும் என்றால் நாங்கள் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள மாட்டோம்.

## எனது விண்ணப்பத்தை எப்போது நீங்கள் சமர்ப்பிப்பீர்கள்?

***நான் பல மாதங்களுக்கு முன் விண்ணப்பித்தேன். ஏன் இன்னும் எனது குடியேற்ற ஆதரவிற்கான விண்ணப்பம் கனடா அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.***

**தளம் முதலில் வந்தவருக்கு முதலில் சேவை என்றவாறு செயல்படுவதில்லை. தற்போதுள்ள அதிக எண்ணிக்கையிலான பதிவு செய்தல்கள் உள்ளதால் நாங்கள் சிலவற்றிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டி உள்ளது.** தற்போது நாங்கள் கனடிய கடற்கரையை விட்டு விலகி உள்ள பப்புவா நியூ கினி மற்றும் நவூறு தீவில் உள்ள மக்களது வழக்குகளுக்கு முன்னுரிமை அளித்து வருகிறோம். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க ஒரு கால அட்டவணையை அளிக்க எங்களால் உத்தரவாதம் கொடுக்க இயலாது.

மேலும் நாங்கள் கனடிய அரசாங்கம் அளிக்கும் ஆதரவு எண்ணிக்கைகள் மற்றும் எங்கள் நிதி நிலைகள் இவற்றால் கட்டுப்பட்டுள்ளோம். இது முழுவதும் நிதி திரட்டுதலைப் பொறுத்தது.

**# மறக்கப்படாத செயற்பாடு**

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

MOSAIC

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஆதரவு எண்ணிக்கைகள் குறைவானதாலும், கனடிய அரசாங்கத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தாலும் மொசைக் நிறுவனம் எல்லா விண்ணப்பங்களையும் முன் கூட்டிய பரிசீலனை செய்து ஒரு ஆதரவு விண்ணப்பம் ஆதரவிற்குத் தகுதி பெற்றுள்ளதா மற்றும் அனுமதி காரணிகளை உட்பட்டுள்ளதா என்று தீர்மானிக்கிறோம்.

**மொசைக் நிறுவனம் தகுதி மற்றும் அனுமதிக்கு உட்படாத விண்ணப்பங்களை சமர்ப்பிக்காது.**

## #மறக்கப்படாத செயற்பாடு திட்டத்தின் செய்முறை எப்படி இருக்கும்?

கனடா அரசாங்கத்திற்கு உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன்னர் உங்களுடன் பணியாற்ற ஒரு தொண்டர் ஒதுக்கப்பட்டு அவர் தேவையான வடிவங்கள் மற்றும் ஆவணங்களைப் பூர்த்தி செய்ய உதவுவார். (இது கடந்த காலத்தில் வித்தியாசமாக இருந்திருக்கலாம்)

விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டவுடன், மொசைக் நிறுவனத்தால் அது முழுமை, தகுதி மற்றும் அனுமதி காரணங்களுக்காக இறுதி பரிசீலனை செய்யப்படும்.

# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## மொசைக் நிறுவனம் எனது விண்ணப்பத்தை கனடா குடியேற்றத் துறைக்கு சமர்ப்பித்தவுடன் என்ன நடக்கும்?

மொசைக் நிறுவனம் கனடா குடிநுழைவு, அகதிகள் மற்றும் குடிமை உரிமை அலுவலகத்திற்கு உங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கும் மின் அஞ்சல் ஒன்றை உங்களுக்கு அனுப்பும்.

உங்களுக்கு ஆதரவு அளிக்க உத்தேசிக்கும் மொசைக் நிறுவனத்தின் விண்ணப்பத்தை அவர்கள் மதிப்பீடு செய்து ஏற்றுக்கொண்டபின் உங்களுக்கு ஒரு மின் அஞ்சல் கிடைக்கும். உங்கள் சார்பாக ஒரு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அந்த விண்ணப்பம் ஆஸ்திரேலியாவிலுள்ள கனடா தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்க உங்களுக்கு ஒரு மின் அஞ்சல் வரும். அது உங்களது கோப்பு எண்ணிக்கை மற்றும் குடியேற்ற ஆதரவு பற்றிய செய்தி ஆகியவற்றையும் அளிக்கும்.

# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## கனடா குடியேற்றத்துறையால் எனது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் எவ்வளவு காலம் கழித்து நான் கனடா வர முடியும்?

*சாதாரண அலுவல்களுக்கு ஏற்பட்டுள்ள தற்போதைய தகர்வுகளால் விண்ணப்பங்கள் பரிசீலனை செயல்பாடுகள் எவ்வித வகையானதாக இருந்தாலும் தாமதங்கள் ஏற்படலாம். விரைவாக மாறி வரும் கோவிட்-19 நோய் சூழ்நிலையால் விண்ணப்பங்கள் பரிசீலனைக் காலங்கள் பற்றிய குறிப்பிட்ட செய்தியை எங்களால் அளிக்க இயலாது. வழக்கமான விண்ணப்ப பரிசீலனை ஆரம்பித்து உங்கள் வழக்கு அடுத்த கட்டங்களுக்குத் தயாரானவுடன் நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வோம்.*

*வழக்கமான அலுவல்கள் தொடரும்போது, கனடா குடிநுழைவு, அகதிகள் மற்றும் குடிமை உரிமை அலுவலகம், அகதிகளின் உடனடித் தேவைகளைப் பொறுத்து முன்னுரிமையை நிர்ணயிக்கும். அத்துடன் பன்னாட்டு குடியேறல் அமைப்பு அகதிகளின் பயணத்தை ஒழுங்கு செய்தல், விமானங்கள் கிடைக்கப்பெறுதல்,கனடா குடியேற்ற ஆதரவாளர்கள் புதிதாக வரும் அகதிகளை ஏற்றுக்கொள்ளும் ஆயத்த நிலை ஆகியவை மற்ற காரணிகள் ஆகும்.*

மொசைக் நிறுவனத்தின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவது நீங்கள் கனடா வருவதை உறுதி செய்வதல்ல. அது ஒரு நீண்ட செய்முறையில் முதல் படியே ஆகும். செய்முறையின் பல கட்டங்கள் மற்றும் செயல்முறைக்கான காலங்கள் பற்றிய மேற்கொண்டு விவரங்கள் இங்கே காணலாம்: https://www.canada.ca/en/immigration-refugees-citizenship/services/refugees/help-outside-canada/private-sponsorship-program/how-we-process-applications.html

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## நுழைவு அனுமதி வழங்கும் அலுவலருடனான நேர்முகத்தில் நான் எதை எதிர்பார்க்க வேண்டும்?

நேர்முகம் பற்றிய அழைப்பு உங்களுக்கு மின் அஞ்சல் அல்லது தொலைபேசியின் மூலம் அளிக்கப்படும்.

அகதி ஆதரவு விண்ணப்ப செய்முறையின் முக்கியமான அங்கம் இந்த நேர்முகமாகும். தனியார் அகதி ஆதரவு திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் கனடாவில் குடியேற்றத்திற்குத் தகுதியும் அனுமதியும் பெற்றவரா என்று தீர்மானிப்பதே இந்த நேர்முகத்தின் நோக்கமாகும். விண்ணப்பத்தின் செய்முறையில் இந்த நிலையில் கனடா அரசாங்கம் தகுதி மதிப்பீட்டின் அங்கமாக கனடாவில் குடியேற்றம் அளிப்பது உங்களுக்கு மிகவும் சிறந்த ஒன்றா என்று தீர்மானிக்கும். கனடிய அரசாங்கம் உங்களுக்கு வேறு ஏதேனும் தீர்வு உள்ளதா என்று பரிசீலனை செய்யும்.

நுழைவு அனுமதி வழங்கும் அலுவலருடனான நேர்முகத்திற்குத் தயார் செய்வது பற்றிய விவரத்திற்கு தயவு செய்து இங்கே சொடுக்கிடவும்.

நுழைவு அனுமதி வழங்கும் அலுவலருக்கு முடிவு எடுக்க **ஒரு ஆண்டிற்கும் மேலே ஆகலாம்** என்பதை தயவு செய்து அறிந்து கொள்ளுங்கள்.

<u>அனுமதியளிப்பு சோதனைகள்</u>

கனடா அரசாங்கம் நீங்கள் திட்டத்திற்குத் தகுதி ஆனவர் என்று தீர்மானித்தால், கனடிய அதிகாரிகள் உங்களுக்கும் உங்கள்

# மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

MOSAIC

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் கீழ்க்கண்ட சோதனைகள் செய்து நீங்கள் கனடாவிற்குள் அனுமதிக்கப்பட இயலுமா என்று தீர்மானிப்பார்கள்.

- மருத்துவப் பரிசோதனை
- பாதுகாப்புப் பரிசோதனை
- குற்றப்பழி பரிசோதனை

ஒருவர் கனடாவில் அனுமதிக்கப்பட இயலாது என்று தீர்மானிக்கப் பல காரணங்கள் உண்டு. தனி நபர் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடியவர், மிகவும் கடுமையான அல்லது குழு அளவிலான குற்றம் புரிந்தவர் என்ற வரலாறு, பன்னாட்டு அல்லது மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டவர், பொது மக்களின் ஆரோக்கியத்திற்கு ஆபத்து விளைவிப்பவர் அல்லது மோசடியில் ஈடுபட்டவர் போன்றவை அக்காரணங்கள் ஆகும். நீங்கள் இந்த மூன்று அனுமதியளிப்பு சோதனைகளில் தேர்ச்சி பெற்றால் தான் கனடாவுக்குப் பிரத்தியேக ஆதரவில் வர முடியும்.

## <u>எனது விண்ணப்பத்தின் நிலைமையை எப்படி நான் சோதிப்பது?</u>

நீங்கள் உங்கள் விண்ணப்பத்தின் நிலைமையை உங்களுக்கு அளிக்கப்பட்ட G எண்ணை உபயோகித்து கனடா குடியேற்றத் துறையின் இணைய தளத்தில் சோதிக்கலாம்.
https://www.canada.ca/en/immigration-refugees-citizenship/services/application/check-status.html?s=5

# # மறக்கப்படாத செயற்பாடு

**கனேடிய பிரத்தியேக ஆதரவளிப்பு**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

MOSAIC

## ***கனடாவில் உள்ள ஆதரவு நல்கும் குழுவின் பொறுப்புக்கள் என்ன?***

கனடாவுக்குப் பிரத்தியேக ஆதரவுடன் செல்வது என்பது உங்களைக் கனடாவுக்குக் கொண்டுவர ஆதரவளிக்கும் குழுவினர் ஒன்றாக உங்களது விண்ணப்பத்தில் கையெழுத்து இட்டுள்ளனர் என்று அர்த்தம். இக்குழுவினர் கனடாவிற்கு நீங்கள் வந்த பின்னர் முதல் 12 மாதங்களுக்கு உங்களுக்கு உதவி செய்யவும் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உங்களது ஆதரவாளர்கள் நீங்கள் ஒரு நிரந்தர குடியிருப்பைத் தேடிக்கொள்ளவும், ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பிக்கவும், உடல்நலக் கவனிப்பிற்காக பதிவு செய்து கையெழுத்திடவும், ஆங்கில வகுப்புக்களில் சேரவும், வேலை வாய்ப்பைத் தேடவும், உதவி செய்யும் பொறுப்பைக் கொண்டுள்ளார்கள்.

ஒரு பிரத்தியேக ஆதரவு பெற்ற அகதி என்ற விதத்தில் உங்களுக்குள்ள உரிமைகள் பற்றி மேலும் படிக்க இங்கே சொடுக்கிடவும்.

## ***கனடாவில் நான் என்ன எதிர்பார்க்கலாம்?***

நீங்கள் கனடாவுக்கு ஒரு அகதியாக அல்லது புகலிடம் தேடுபவராக ஆதரவு அளிக்கப்பட்டபின், கனடாவில் உங்களுக்கு என்ன நிகழும், உங்களுக்கு ஆதரவு அளித்தவர்கள் யார், யார், எவ்வளவு உதவி அவர்கள் உங்களுக்கு அளிப்பார்கள், கனடாவில் உங்கள் குழந்தைகள்

MOSAIC

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

மகிழ்ச்சியாக இருப்பார்களா, எந்த விதமான வேலை உங்களுக்குக் கிட்டும் மற்றும் அவை போன்ற பலப்பல கேள்விகள் இருக்கலாம். இந்தக் கேள்விகளுக்கான பதில்களை அறிய மிகச் சிறந்த வழி நீங்கள் கனடாவுக்கு வரும் முன்னரே உங்கள் ஆதரவளிப்பவர்களிடம் உரையாடுவதே ஆகும்! உங்களுக்குள்ள கேள்விகளை எல்லாம் கேட்கத் தயங்காதீர்கள். அவர்கள் கனடாவில் உங்களை ஒரு புதிய வாழ்க்கைக்குத் தயார் படுத்தி அங்கே சகஜமாக வாழ உதவி செய்யவே இருக்கிறார்கள். உங்களுக்குள்ள எந்தக் கேள்விகளுக்கும் மகிழ்வுடன் பதில் அளிக்க இருக்கிறார்கள்.

கனடா அரசாங்கம் மற்றும் நீங்கள் செல்ல இருக்கும் கனடா மாநிலத்தின் இணைய தளங்களில் கனடாவில் வாழ்க்கை பற்றி பொது தகவலைக் கண்டறியலாம் (இங்கே சொடுக்கிடுங்கள்).

## எப்படி நான் எனது குடும்பத்தைக் கனடாவுக்குக் கொண்டுவருவது?

தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்கள் கீழ்வருமாறு:

- கணவன் அல்லது மனைவி அல்லது பொது சட்ட ரீதித் துணைவர்.
- குடியேற்றம் செய்யப்பட்ட அகதியின் சார்ந்துள்ள குழந்தைகள் அல்லது அவளது கணவன்/ அவரது மனைவி அல்லது பொது சட்ட ரீதித் துணைவர்

MOSAIC

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

- சார்ந்துள்ள குழந்தைகளின் சார்ந்துள்ள குழந்தைகள்.

பொதுவாக, சார்ந்துள்ள குழந்தைகள் 22 வயதிற்குள்ளாகவும், திருமணம் ஆகாதவர்களாகவும், அல்லது ஒரு நோயின் விளைவாக தொடர்ந்து கவனம் தேவைப்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். சார்ந்துள்ள குழந்தைகளின் வயது அசலான குடும்ப உறுப்பினரின் நிரந்தரக் குடியேறலுக்கான விண்ணப்பத் தேதியில் உள்ள வயதாகக் கணக்கிடப்படுகிறது. ஆதலால், அசல் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டபின் எவருக்கு 22 வயது நிறைகிறதோ, அவர் மற்ற தகுதிகளைக் கொண்டிருந்தால் "ஒரு வருட இடைவெளி" என்ற ஏற்பாட்டின்படி அவர் இன்னும் ஒரு சார்ந்துள்ள குழந்தையாகக் கருதப்படுவார். “ஒரு வருட இடைவெளி" என்ற ஏற்பாட்டைப்பற்றி மேலும் வாசித்து அறிய இங்கே சொடுக்கிடவும்.

## <u>எனக்கு இன்னும் கேள்விகள் இருந்தால், நான் யாரைக் கேட்பது?</u>

கனடா வாழ்க்கை பற்றி உங்களுக்குள்ள எந்தக் கேள்விகள் இருந்தாலும் உங்களது ஆதரவுக்குழுவிடம் கேட்கலாம். விண்ணப்பத்தின் செய்முறை பற்றி மேலும் சில கேள்விகள் இருந்தால் மொசைக் நிறுவனம் மகிழ்வுடன் பதில் அளிக்கும்.

மொசைக் நிறுவனத்திடம் கீழ்கண்ட மின் அஞ்சலில் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள் onf@mosaicbc.org